
தமிழ்நாடு காவல்துறை
பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு
SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE Co-Ed
THIRUVANNAMALAI - 606603
SINCERITY
STUDY
SERVICE

Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

## சண்முகா கல்லூரியில்
## காவலன் செயலி விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் மாவட்ட காவல்துறை சார்பாக, **காவலன் செயலி** விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி**, பொருளாளர் **கோ.இராஜேந்திரகுமார்** வாழ்த்துகளோடு நடைபெற்ற இவ்விழாவிற்குக் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **என்.குமார்** தலைமை தாங்கினார். முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். மாவட்ட காவல் கூடுதல் கண்காணிப்பாளர் திருமதி **ஜி.வனிதா** பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்புப் பிரிவு அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தமிழ்த்துறைத்தலைவர் **இரா.சங்கர்** நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார். பி.பி.ஏ துறையின் உதவிப்பேராசிரியர் **கலைச்செல்வன்** நன்றியுரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட காவல் கூடுதல் கண்காணிப்பாளர் திருமதி **ஜி.வனிதா** பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்புப் பிரிவு அவர்கள் கலந்து கொண்டு பல்வேறு உதாரணங்களைக் காட்டி மாணவ,மாணவியர் தங்களைப் பாதுகாப்பாக எப்படி வைத்துக்கொள்வது எனவும், முகநூல், வாட்ஸ்அப் போன்ற செயலிகளைப் பயன்படுத்தும்போது எப்படிப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பாக, தங்களுடைய புகைப்படங்களை அதில் பதிவேற்றம் செய்வதோ, தங்களைப் பற்றி முழுவிவரங்களைக் குறிப்பிடுவதோ கூடாது என்றும், முகம் தெரியாத நபர்களோடு இது போன்ற செயலிகளில் தொடர்பில் இருக்கக் கூடாது என்றும் எடுத்துத்துரைத்தார். பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எதிரான பல்வேறு குற்றங்களைப் பற்றியும், அவற்றை தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் விளக்கிக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஆய்வாளர், உதவி ஆய்வாளர்கள், காவல் துறையினர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர் உள்ளிட்டோர் திரளாகக் கலந்து கொண்டனர்.

தாளாளர்